மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளின்படி, கோவில்களின் நிர்வாக அதிகாரிகள் கோவில் தேர்கள் உட்பட கோவில்களின் வாகனங்கள், குடை முதலிய பரிவாரப் பொருள்களை நல்ல நிலையில் பேணி வரவேண்டும். தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையாளரும் கோவில் தேர்களுக்குத் தீயாலும், மழையாலும் சேதம் ஏற்படா வண்ணம் அவற்றைப் பாதுகாப்பதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு தனது சார்நிலை அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்.

Separate University for Hindu Theology.

* 171. Q.—PULAVAR ARIVUDAI NAMBI (on behalf of Thavathiru KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government will take steps to establish a University for the propagation of Hindu Theology in Tamil Nadu?

சமயத் தத்துவத்திற்கு தனிப் பல்கலைக் கழகம்

புலவர் அறிவுடைநம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் சமயத் தத்துவத்தை வளர்க்கத் தனியே பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received messages from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling